# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை, மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2004 பெப்புருவரி 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2003 திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவின் பஞ்சிகாவத்தை பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு 12. |
| கொழும்பு | கொழும்பு | புதுக்கடை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்தியர் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு 12. |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பிரிவின் நாரஹேன்பிட்டி பிரதேசத்தின் மேலதிக விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர், நாயகம், கொழும்பு 12. |
| கொழும்பு | இரத்மலானை | கொழும்பு பிரிவின் இரத்மலானை தெற்குப் பிரதேசத்தின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு 12. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | தெஹிவளை | தெஹிவளை- களுபோவில பிரிவின் பிறப்பு, இறப்பு, வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு 12. |
| கொழும்பு | ஹங்வெல்ல | ஹேவாகம் கோரளைப் பிரிவின் (அவிசாவளை) விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு 12. |

1-146

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவராகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளியாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவராயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவராக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்கள் உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2004, பெப்புருவரி 11 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும்படி பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2003.12.16

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | நாவற்குடா பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனைபற்று வடக்குப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | மண்முனைப்பற்று வடக்கு பிரிவின் புளியந்தீவு பிரதேசத்தின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | கோரளைப்பற்று | வாழைச்சேனைப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஏறாவூர் கோரளைப்பற்றுப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு. |

1-94

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழியில் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி

இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்குள் உள்ள தமிழ் மொழிமூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

2. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராகவும், குறிப்பிடத்தக்க சொத்துக்களையும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இரு பாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவராக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் மாவட்ட செயலகம், காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம சேவை அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சங்கம், மற்றும் கூட்டுறவுச் சங்கக் கடைகள் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

7. இதன் பொருட்டு தேவைப்படுகின்ற விண்ணப்பப்படிவம் உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2004, பெப்புருவரி 03 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2003.12.16

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | தலவாக்கலை-லிந்துல பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | கொத்மலை | மெதபனே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலைப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | கொத்மலை | பல்லேபனே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலைப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | கொத்மலை | ஹற்றன் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபுளத்கம பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா. |

01-93

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி அமைச்சு

காணி ஆணையாளர் திணைக்களம்

### குடியேற்ற அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

காணி ஆணையாளர் திணைக்களத்தில், குடியேற்ற அலுவலர், பதவிக்கு, ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்த்தலுக்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 02.02.2004 ஆந் திகதி ஆகும்.

2. **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-

2.1 ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

2.2 உயர்ந்த குணமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று, 18 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித்தகைமைகள்**.- க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில், மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதாவது ஒரு பாடத்தில் திறமை சித்திகள் உட்பட, ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல், அத்துடன் அரச அனுமதி பெற்றிருக்கும் நிலையம் ஒன்றினால் வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா கற்கையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பெற்றவர்கள் அதே டிப்ளோமாவின் ஆரம்ப கற்கைநெறியில் சித்திபெற்றிருந்தால் க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டியதில்லை.

4. **சம்பள அளவுகள்**.- வருடச் சம்பளம் ரூபா 51,840 ஆகும். வருடாந்த சம்பள உயர்வு ரூபா 1,320 ஆகும். அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள விசேடப்படி (இடைக்காலப்படி) வழங்கப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- அரச வர்த்தமானப் பத்திரிகையின் மூலம், விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அரச நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/ 90 இன் பிரகாரம் போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தி, இப்பரீட்சையின் தகைமைத் திறனுக்கேற்ப ஆட்சேர்ப்பு இடம்பெறும்.